10-07-1987


# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233


கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ❋ ஆனி 1987 ❋ இதழ் - 138


## வளரும் பயிரை முளையிலே தெரியும்



அப்பா பொறியியலாளர். அம்மா பல்கலைக்கழகத்தில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர். துஷ்யந்தன், ஜனனி அவர்களின் பிள்ளைகள். பிள்ளைகளுக்கு இயல்பாகவே வீட்டுத் தோட்டம் செய்வதில் விருப்பம் உண்டாயிற்று. மில்க்வைற் தொழிலதிபர் வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிப்பதற்கு முன்மாதிரியாகத் தாமே தம் வளவில் தோட்டஞ் செய்கிறார். தோட்டத்து விளைவுகளில் பெரும் பகுதியை விதைக்கு விட்டுப் பலருக்கும் விநியோகஞ் செய்கிறார்.

இவர் கல்லடி உப்போடைச் சிறுவர் இல்லத்துக்குக் கொடுத்த கீரை விதையை அவர்கள் மணற்பூமியில் விளைவுசெய்து 2000 ரூபாவுக்கு விற்றார்கள். இங்ஙனமே பலரும் மிளகாய், போஞ்சி, வெண்டை, அகத்தி, பப்பா முதலியன பயிராக்க உதவுகிறார். இவற்றையெல்லாம் கேட்டறிந்த இவர்கள் அப்பா, அம்மா ஆகியோரின் உதவியோடு வீட்டுத்தோட்டம் செய்யத் தயாரானார்கள். சிறுபிள்ளை வேளாண்மை வீட்டுத் தேவைக்கு ஓரளவுக்குப் பயன்தருகிறது. இன்று மல்லிச் செடி வளர்த்துச் சம்பல் அரைக்கவும், ரசத்தில் இடவும் உதவுகிறார்கள். வீட்டில் அழகு தரும் குரோட்டன் செடிகள் கீரைப் பாத்திக்கு இடங்கொடுத்து விலகிவிட்டன. ஒவ்வொரு சதுர அங்குல நிலத்திலும் ஏதாவது உண்டாகிறது. போத்தலில் நீர் முகந்து சொட்டு நீர்ப்பாசனம் எனச் செடிக்கு ஊற்றுகிறார்கள்.



கோண்டாவில், மத்திய சனசமூக நிலைய மரம்நாட்டு விழாவில் மில்க்வைற் தொழிலதிபர் கிராம மக்களுக்கு மரம் அன்பளிப்புச் செய்கிறார்.

★ சிறுவர் சிறுமியர் சிறப்பிதழ் ★

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## சுந்தரமூர்த்திநாயனர் தேவாரம்

### திருநின்றியூர்

பண் -- நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

ஆறுகந் தார்அங்கம் நான்மறை யார்எங்கு மாகிஅடல்
ஏறுகந் தார்இசை ஏழுகந் தார்முடிக் கங்கைதன்னை
வேறுகந் தார்விரி நூலுகந் தார்பரி சாந்தமதா
நீறுகந் தார்உறை யும்மிட மாந்திரு நின்றியூரே.

திருச்சிற்றம்பலம்

வேதத்தின் ஆறு அங்கங்களையும் விரும்பிச் செய்தருளியவரும், நான்கு வேதங்களையும் உடையவரும், எவ்விடத்தும் நிறைந்து நின்று வெல்லுதலையுடைய எருதை விரும்பி ஏறியருளுபவரும், ஏழிசைகளையும் கேட்டருளுபவரும், கங்காதேவியைத் தலையில் மறைத்து வைத்தருள்புரிபவரும், முப்புரிநூலாகிய பூணூலை அணிந்தருள்பவரும், திருநீற்றை விரும்பிப் பூசிக்கொள்கின்றவருமாகிய இறைவன் எழுந்தருளியுள்ள இடம் திருநின்றியூராகும்.

# திருவள்ளுவர் திருக்குறள்

## மன்னரைச் சேர்ந்து ஒழுகுதல்

(அமைச்சர்கள் அரசரைச் சேர்ந்து ஒழுகும் முறை)

**" குறிப்பறிந்து காலம் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல் "**

அரசனிடம் ஒரு காரியத்தைச் சொல்லக் கருதினால், அவன் மனக்குறிப்பினை அறிந்து சொல்லுதற்கேற்ற காலத்தையும் அறிந்து அவனுக்கு வெறுப்பு விளையாதனவாய் விரும்பத்தக்கனவாய் உள்ளனவற்றை அவன் விரும்பும் வகையிற் சொல்லுக.

**Behaviour Towards Kings**

Read his mind, bide time and speak persuasively of that which he likes and does not hate.

# 1987 யூன் மாத நிகழ்ச்சிகள்

1. திங்கள் — கும்பளாவளைப் பிள்ளையார் கொடி
சேக்கிழார்சுவாமிகள் குருபூசை
2. செவ்வாய் — திருக்கேதீஸ்வரம் கொடி
3. புதன் — ஆயிலியம்
4. வியாழன் — பகல் 8-35 அட்டமி
5. வெள்ளி — அட்டமி நவமி
வன்னி விளாங்குளம் பொங்கல்
6. சனி — பகல் 9-54 வரை நவமி
8. திங்கள் — ஏகாதசி விரதம்
வற்றாப்பளை பொங்கல்
9. செவ்வாய் — பிரதோஷவிரதம்
வைகாசி விசாகம்
11. வியாழன் — பூரணை விரதம்
12. வெள்ளி — திருஞானசம்பந்தர் குருபூசை
14. ஞாயிறு — கந்த முருகேசனார் தினம்
15 திங்கள் — தமிழ் ஆனி மாதப்பிறப்பு
இராசா அண்ணாமலைச் செட்டியார் நினைவு
16. செவ்வாய் — வண்ணை வீரமாகாளி கொடி
18. வியாழன் — பகல் 11-02 அட்டமி
19. வெள்ளி — அட்டமி நவமி
20. சனி — பகல் 8-19 வரை நவமி
21. ஞாயிறு — ஈழகேசரி பொன்னையா நினைவு
22. திங்கள் — ஏகாதசி விரதம்
பூநார் நாகதம்பிரான் பொங்கல்
23. செவ்வாய் — கார்த்திகை விரதம்
பிரதோஷ விரதம்
24. புதன் — திருநெல்வேலி முத்துமாரி கொடி
25. வியாழன் — அமாவாசை விரதம்
26. வெள்ளி — நயினை நாகபூஷணி கொடி
பொலிகண்டி கந்தவனம் கொடி
27. சனி — பண்டிதமணி பிறந்தநாள்
28. ஞாயிறு — சோமசுந்தரப் புலவர் பிறந்தநாள்

## நல்லூரில் யூன் மாதம்

2. செவ்வாய் — முத்துக்குமாரசாமி
சஷ்டி அபிடேகம் காலை
9. செவ்வாய் — வைகாசி விசாகம்
ஆறுமுகசுவாமி ஸ்நபனாபிஷேகம்
நியாயார்ச்சனை உற்சவம் மாலை 5-00
15. திங்கள் — சங்கிராந்தி தீர்த்தம் காலை 8-00
23. செவ்வாய் — கார்த்திகை உற்சவம் மாலை

## எலுமிச்சை

வளவுகளில் அவசியம் வளர்க்க வேண்டிய எலுமிச்சையின் இலையே சம்பலுக்கு நல்லது. மிளகு, உப்பு, இலை, பெருங்காயம் இடித்துப் பயன்படுத்தலாம். எலுமிச்சம் பழம் பித்தத்தைப் போக்கும், விஷத்தை நீக்கும், நரம்புகளுக்கும் வலிமை தரும் இரத்த சுத்தி உண்டாக்கும். இருதயத்தைப் பலப்படுத்தும்.

★ சிசு எனில் எவர்க்கும் சித்தம் இரங்கும் ★



## கலைமகள் சிந்தனை

புத்தகத் துள்ளுறை மாதே
  பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை, நங்காய்
  வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடையுடை யாளே
  மூவுலகுந் தொழும் தேவி
எத்தனை யும்உனைத் தொழுவோம்
  எண்ணெழுத் தெங்கட் கருள்வாய்.

— பழம் பாடல்

---

## அருமைக் குழந்தைகளே!

உலகக் குடிசனத் தொகையில் நீங்கள் அரைப்பங்கினர் என்பது உங்களுக்குத் தெரியும்தானே. நாளை உலகு உங்களுடையதேயாம். குழந்தைகள் ஆண்டு என்று உலக நாடுகள் உங்கள் நினைவைக் கொண்டாடுகிறார்கள். உங்கள் சுற்றாடலைக் கருதுகிறார்கள். உங்கள் சுகநலத்தை நாடுகிறார்கள். உலகில் தாய், தந்தையர், ஆசிரியர்கள் உங்களுக்காகவே படாதபாடு படுகிறார்கள். உங்களிற் பலர் பாடசாலைகளிற் படிக்கிறீர்கள். பலர் பெரும்படிப்புப் படிக்கிறீர்கள். உங்கள் தம்பி தங்கையர்கள் வீட்டில் விளையாடுகிறார்கள். எல்லோரும் எங்கள் செல்வங்கள். தொட்டிலில் எங்கள் செல்வங்கள் தாலாட்டுப் பாட்டுக்கள் கேட்டு மகிழ்ந்து உறங்குகிறார்கள். நேர்சரிப் பள்ளிகளில் சிறுவர் சிறுமியர் மழலைப் பாடல்கள் கேட்டு மகிழ்ந்து துள்ளுகிறார்கள்.

ஆரம்பப் பாடசாலைகளில் நம் செல்வங்கள் பல பாடங்கள் மூலம் அறிவைப் பெருக்குகிறார்கள். அடுத்துப் பெரு வகுப்புகளில் எதிர்காலத்துக்காவன காண்பதற்குத் துறைகளை நாடிப் படிக்கிறார்கள். எல்லோரும் படிக்கிறார்கள். படிப்பு அவர்களைப் பூரணப்படுத்துகிறது.

---

## பயிலுவோம்

தேன் இருக்கும் இடத்தினைத்
  தேடிமொய்க்கும் வண்டு போல்
சீனி உள்ள இடத்தினைத்
  தேடி ஊரும் எறும்புபோல்
பழம் நிறைந்த சோலையைப்
  பார்த்துச் செல்லும் கிளியேபோல்
வளம் நிறைந்த நாட்டிலே
  வந்துசேரும் மக்கள் போல்
பள்ளமான இடத்தினைப்
  பார்த்துப் பாயும் வெள்ளம்போல்
நல்ல நல்ல நூல்களை
  நாடி நாமும் பயிலுவோம்.

— அழ. வள்ளியப்பா

---

## ஆபாசங்கள் எழுதாப் பத்திரிகைகள்

ஈழத்தமிழர் பத்திரிகைத் துறையில் சாதனை புரிந்துள்ளார்கள். சுதர்மம், சுபோதினி, சிவனேசன், சுகுணபோதினி, சன்மார்க்கபோதினி, ஞானாமிர்தம், ஞானசித்தி, தத்துவபோதினி, ஞானபானு, அறிவுக் கதிரவன், சைவபோதினி, ஞானப்பிரகாசம், வித்தகம், கலைக்கண், தமிழ்ச் செல்வி, விவேகி, ஈழகேசரி, சுதேசநாட்டியம், இலங்கைநேசன், உதயபானு, சைவ உதயபானு, தேசாபிமானி, இலக்கியக் கண்ணாடி இவ்வாறாக எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி மறைந்துவிட்டன.

---

## குழந்தைகளைப் பெரிதும் விரும்பிய பாரதப் பெரும்பிரதமர் நேரு

"This was the man who with all his mind and heart, loved Iindia and the Indian people. They, in turn, were indulgent to him and gave him of their love most abundantly and extravagantly."

"He made dreams come true"

---

## வாழ்க நம் நாடு

**நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை**

கண்டவர் மகிழ வேண்டும்
  கேட்டவர் புகழவேண்டும்
கொண்டவர் குலவ வேண்டும்
  குறைந்தவர் நிறைந்து மெச்ச
அண்டின எவரும் அச்சம்
  அடிமையை அகற்றுமாறு
தண்டமிழ் அலைகள் வீசி
  நம்நாடு தழைக்கவேண்டும்.

தாழ்வுகள் யாவும் போகத்
  தரித்திரக் கொடுமை நீங்கிச்
சூழ்கடல் உலகில் மக்கள்
  சுதந்திரத் துடனே வாழ்ந்து
ஆழ்கலை அறிவும் ஓங்கி
  ஆண்டவன் அன்பைக் கண்டு
வாழ்ந்திட வேண்டு மென்றே
  நம்நாடு வாழவேண்டும்.

---

★ பாலகர் என்றால் பாவியும் பரியும் ★

## இயற்கையின் அருமை

இந்த உலகம் அற்புதமானது. நாம் இங்கே வந்து பிறந்து வளர்ந்து அநுபவித்துப் போகிறோம். சூரியன் வெளிச்சத்தையும் சூட்டையும் தருகிறது. சந்திரன் இரவில் ஒளியூட்டுகிறது. வானம் மழை தருகிறது. வானத்தில் எத்தனை உலகங்கள் அந்தரத்தில் காட்சி அளிக்கின்றன. மழை பெய்ததும் பூமிமகிழ்ந்து பூரித்து நமக்கு வேண்டியவைகளைத் தருகிறது. இயற்கை அன்னை, பூமித்தாய் எம்மைப் பெற்ற தாய்மார் போன்றவளே.

நாம் வாழும் பூமியில் மலைகள், ஆறுகள், நீர்நிலைகள், விளைநிலங்கள் எல்லாம் உண்டு. நாம் வாழ்வதற்கு வீடுகள் கட்டிக்கொள்ளவும் பூமித்தாய் இடங்கொடுக்கிறாள். நாம் அவளைக் காலால் மிதித்து நடக்கவும் அவள் பொறுத்துக்கொள்ளுகிறாள். நாங்கள் காலணிகள் அணிந்து மிதித்தாலும் சகித்துக்கொள்கிறாள். நாங்கள் அவளைக் கொத்தி, வெட்டி, கிண்டி, கிளறினாலும் அவள் பூரித்து ஆனந்தம்கொண்டு விளைவைத் தருகிறாள். அவளிடம் விளைவுகள் பெருகுவதற்கு நீர் கிடைக்கிறது. விளைவு முற்றிப் பதமாவதற்குச் சூரியன் உதவுகிறான். எமக்கு ஒரு குறையுமில்லை. நாம் பாடுபட்டு உழைத்து உண்பதற்குப் பழகுதல் வேண்டும்.

## திக்குத் தெரியவில்லை

**நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை**

திக்குத் தெரிய வில்லை — என்ன
தீவினை செய்தேனோ!
மக்கள் படுந்துயரை — சற்றும்
மாற்ற வகையறி யேன்.

கூவும் கருங்குயிலே — ஒரு
குறி சொல்ல மாட்டாயா?
தேவன் அருள் வருமா? — சுற்றும்
தீமைகள் தீர்ந்திடவே.

பாடும் பசுங்கிளியே! — எந்தன்
ஜாதகம் பார்த்துச் சொல்லு
நாடும் சுதந்திரத்தை — எந்த
நாளில் அடைந்திடுவேன்.

செய்கை சுறுசுறுப்பாம் — சிறு
சிட்டுக் குருவிகளே!
வைவதை விட்டுவிட்டு — ஒரு
வாழ்த்துரை சொல்லீரோ?

காதலை இன்னதென்று — செய்து
காட்டும் புறுமணியே!
வேதனைப் புல்லடிமை — விட்டு
விடுதலை விடிவதெப்போ?

ஆடும் களிமயிலே! — ஒரு
ஆரூடம் சொல்லுவையோ?
தேடும் உரிமைகளை — இந்த
தேசம் அடைந்திடுமா?

காகம் வழிவிடுமா? — நல்ல
கருடன் வலம்வருமா?
நாகம் சகுனமுண்டா? — ஒரு
நரியேனும் முன்வருமா?

என்று மனந்தளர்ந்தே — நான்
ஏங்கித் தவித்து நின்றேன்
வென்றிதருந் துணைபோல் — ஒரு
விண்ணொலி பெண்குரலாய்.

ஞானக் குலத்தில் வந்தாய் — பல
நற்றவம் உற்றவன் நீ
ஏன் உனக்கிந்த மதி? — விட்டு
எழுந்திரு என் மகனே!

ஹிம்சை புரிந்தவர்கள் — அந்த
ஹிம்சையினால் அழிவார்
வம்சகுணம் உளதாம் — சாந்த
வாய்மை மறக்காதே.

சண்டைகள் விட்டொழியும் — பல
சச்சரவும் போகும்
அண்டி உனை வணங்கி — பலர்
அமைதி அறிந்திடுவார்.

அந்தக் குரல் அறிந்தேன் — அது
அன்னையின் பொன்மொழி தான்
சிந்தை தெளிந்து விட்டேன் — தெய்வ
சிந்தனை செய்திருப்பேன்.

## தமிழே எந்தாய்மொழியே!

தெலுங்கு கன்னடந் துளு மலையாளந்
தோன்றுந் தமிழ் மொழியே
இலங்குங் கோயில் எங்குந் தங்கும்
இசைமிகு தமிழ்மொழியே
என்தன் செந்தமிழ் என்தன் செந்தமிழ்
என்று மகிழ்வேனே.
எந்தாய் மொழியென எந்தாய் மொழியென
எங்கும் புகழ்வேனே.

— மணி. திருநாவுக்கரசர்

## பாப்பாண்டவர் மாளிகை

உலகில் உள்ள கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களின் தலைவர், திருத் தந்தையார், பரிசுத்த பாப்பாண்டவர் உரோமாபுரியிலே தங்கியிருக்கும் மாளிகை உலகில் மிகப்பெரிய குடியிருப்பு மண்டபமாகும். பதின்மூன்று ஏக்கர்ப் பரப்பிலும் பெரிய நிலத்தில் வசதியான அரண்மனை அற்புதமானது. உரோமாபுரி, இத்தாலி நாட்டில் உள்ள ஒரு சிறிய தனிநாடாகும். அதன் தலைவர் பரிசுத்த பாப்பாண்டவரேதான். அவருடைய திருநாமம் இரண்டாம் போல் யோண் என்பதாகும்.

## படைப்பில் விசித்திரம்

அவுஸ்திரேலியா நாட்டில் கங்காரு என்னும் மிருகம் பெரியது, விரைவாய் ஓடுவது. ஆனல் டிங்கோ சிறியது. இது எதிர்பாராமல் கங்காருவைத் தாக்கிக் கொன்றுவிடுகிறது.

பாம்பு பெரியது, கீரி சிறியது. பாம்பின்மீது கீரி பாய்ந்து கடித்துக் கொன்றுவிடுகிறது.

மயிர்கொட்டிப் புழு பெரியது. எறும்பு சிறியது. நடைமுறையை அறிந்துகொள்ளலாம். ஆனை பெரியது. பூனையைக் கண்டாலே என்னவோ என்று நினைத்துப் பயப்படுகிறது. நாய் பயத்தினுலேதான் கடிக்கிறதாம்.

வில்லியம் டாம்பியர் 1699ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவிற் கண்ட காட்டுநாய் மூர்க்கமுள்ளதாம். அந்த நாயைத்தான் டிங்கோ என்று வழங்கினுர்கள். டிங்கோவின் பற்கள் அதன் கொடிய ஆயுதங்கள். ஆண்டவன் படைப்பால் ஓடுவதற்குக் கால்களும் கடிப்பதற்குப் பற்களும் வரப்பிரசாதம் என்றனர்.

நாயினத்துக்கு நாற்பத்திரண்டு பற்கள் உண்டாம். மனிதனுக்கும் நாய்ப்பற்கள் உண்டு. ஒருசமயம் பாடசாலை மாணுக்கியர் காந்தியடிகளிடம் சென்று, தங்களோடு சேட்டை செய்யும் இரண்டுகாற் குரங்குகளை அஹிம்சை என்னசெய்யும் என்று கேட்டார்கள். அவர்களைப் பார்த்துக் காந்தியடிகள் கேட்டார், உங்களுக்கு நான் அஹிம்சை போதிக்கவில்லை. கடவுள் உங்களுக்குப் பற்களையும் நகங்களையும் தந்துள்ளார்தானே என்றுர்.

## சிட்டுக்குருவி

எள்ளுப் போல கண்ணிருக்கும்
சிட்டுக்குருவி — சின்ன
நெல்லுப் போல மூக்கிருக்கும்
சிட்டுக்குருவி.

முள்ளுப் போலக் காலிருக்கும்
சிட்டுக்குருவி — கோழி
முட்டை போல உருவிருக்கும்
சிட்டுக்குருவி.

காதைப் போலச் சிறகிருக்கும்
சிட்டுக்குருவி — வானில்
காதவழி பறந்திருக்கும்
சிட்டுக்குருவி.

சாதுவான குணமிருக்கும்
சிட்டுக்குருவி — கத்தும்
சத்தம் கூட மெலிந்திருக்கும்
சிட்டுக்குருவி.

— சொ. அடைக்கலம்

## மத்தியகாலத்தின்முன் பத்து பதின்மூன்று நூற்றுண்டுக் காலத்தை அடுத்து வடமொழி இசைநூல்கள் எழுதியவர்கள்

சயதேவர், மதங்கமுனி, அபிநவகுப்தர், அகோபிலர், கமலநாதர், விட்டலர், சோமநாதர், இராமா மாத்தியார்



## தென்னகத்தில் அண்மையில் பலமொழிகளில் இசைவளர்த்தவர்கள்

தியாகராசர், சியாமளா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர், பல்லவி கோபாலையர், சங்கராபரண நரசையர், சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேல், வீணை வராகப்பையர், பிச்சாண்டார், கோயில் சுப்பையர், மகா வைத்தியநாத ஐயர், பட்டணம் சுப்பிரமணிய ஐயர், கரூர் இராமசாமி, பிடில் சுப்பையர், தோடி சுந்தரராவ், இவர்கள் செய்தவை:- கீர்த்தனம், பதம், வர்ணம், சாவளி என்பனவும் பிறவுமாம்.

## மறைந்த இசைநாடக நூல்கள்

அகத்தியம், இசைநுணுக்கம், இந்திரகாளியம், கடகண்டு, குணநூல், கூத்தநூல், சயந்தம், சிற்றிசை, செயல்முறை, செயற்றியம், தாளவகையோத்து, நூல், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பரதம், பரதசேனுபதியம், பெருநாரை, பெருங்குருகு, பேரிசை, மதிவாணர் நாடகம், முறுவல், மோதிரப்பாட்டு, வஞ்சிப்பாட்டு, விளக்கத்தார் கூத்து.

## தேவாரங்களில் பயின்றுவந்த இசைக்கருவிகள்

பேரி, முழவு, தமருகம், வீணை, யாழ், துந்துபி, குழல், கொடுகொட்டி, கிண்கிணி, சிரந்தை (உடுக்கை) மொந்தை, கத்திரிகை, துத்திரி, கறங்கு, துடி, தக்கை, இடக்கை, படகம், தாளம், பாலை, யாழ், கொக்கரை, சச்சரி, பறை, சல்லரி, தருணிதம், தத்தளகம், கல்லலகு, கல்லவடம், சலஞ்சலம், தண்ணுமை, குடமுழவம், தடாரி, பிடசம், முரசம், கிணை, தருணிச்சம்.

★ பிள்ளை என்றிட்டால் பேயும் தாயாம் ★

## ஆளுமே பெண்மை அரசு

நிடதநாட்டரசனுன நளமகாராசனிடம் விதர்ப்ப நாட்டரசன் மகள் தமயந்தி என்னும் அழகியைப்பற்றி அன்னம் கூறியபோது. தமயந்தி அரசுவீற்றிருந்தாற் போல விளங்கினுள் என்றது.

அவளுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கு பெண்மைக் குணங்களும் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்னும் நால்வகைப் படைகளாக இயங்கி அவளைக் காத்தன என்றது. இன்னும் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் ஐம்பெரும் அமைச்சர்களாய் ஆலோசனை கூறின என்றது.

இவ்வாறு ஆளிலே அரசுகண்ட பழைய புலவர்களைப் போல, இன்று மேலைநாட்டறிஞர் ஒருவர் உடம்பின் பல் வேறு உறுப்புக்கள் மந்திரசபையின் உறுப்பினராயிருக்கும் அமைவைக் கூறியுள்ளார். இச்செய்தி ஆனந்தவிகடனில் வெளிவந்தது.

| | | | |
|---|---|---|---|
| 1 | மூளை | — | பிரதமமந்திரி |
| 2 | சுவாசப்பை | — | உள்துறை மந்திரி |
| 3 | இதயம் | — | நிதிமந்திரி |
| 4 | தோல் | — | பாதுகாப்பு மந்திரி |
| 5 | தலை | — | கல்வி மந்திரி |
| 6 | கால்கள் | — | போக்குவரத்து மந்திரி |
| 7 | வயிறு | — | உணவு, விவசாய மந்திரி |
| 8 | வாய் | — | செய்தி, ஒலிபரப்பு மந்திரி |
| 9 | கண்கள் | — | சட்டமந்திரி |
| 10 | கைகள் | — | தொழில் மந்திரி |
| 11 | காதுகள் | — | தபால் மந்திரி |
| 12 | மூக்கு | — | சுகாதார மந்திரி |
| 13 | பற்கள் | — | பொதுத்தேவை விநியோகமந்திரி |
| 14 | நாக்கு | — | பிரசார மந்திரி |

## தம்பி ஒரு புகையன்

தம்பி ஆள் அழகன் நல்லவன். நாள்தோறும் உருக் குலைந்து வருகிருன். கண்பார்வை குறைகிறது. வாயிதழ் கள் கறுத்து உலர்ந்துபோகின்றன. கம்கம் என்று ஓயா மல் இருமுகிருன். வலக்கையின் பெருவிரல், ஆள்காட்டி விரல் நகங்கள், மஞ்சள் நிறமாகிக் கருமையடைகின்றன. ஓகோ! தம்பி ஒரு புகையனுக்கும். புகையிலையில் முப்பத் திரண்டுக்கும் அதிகமான நஞ்சு உண்டு. அது நுரையீரலைக் கெடுக்கிறது. இரத்தப்பைகளைக் கெடுக்கிறது. உள்ளுறுப் புக்களை உருக்குலைக்கிறது. புகையிலையில்உள்ளநிகொட்டின் ஆட்கொல்லி. புகைப்பதால் புற்றுநோய் கட்டாயமாக வருகிறது. நுரையீரலில் புற்றுநோய் ஆபத்தானது. புகையிலையால் காபன் மொனுெக்சைட் அதிகரிக்கிறது. மூச்சுத்திணறல் புகையினுல் வருகிறது.

## நிகண்டு என்னும் நடையகராதி

நிகண்டு மொழிப்பொருள் முற்ற உணர்தற்குக் கருவி யாக அமைவது. ஒரு பொருள் குறித்த சொற்களின் தொகுதியையும், பலபொருள் குறித்த தனிச்சொற்களின் தொகுதியையும் பாட்டில் அமைத்துக் கூறுவது. தமிழில் பலவகை நிகண்டுகள் பயின்றுவருகின்றன. திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி நிகண்டு, கயாகர நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, பல்பொருட் சூடாமணி நிகண்டு, பொதிகை நிகண்டு, அகப்பொருள் விளக்க நிகண்டு, நாமதீப நிகண்டு, வேதசிரியார் நிகண்டு, நாநார்த்த தீபிகை, விரிவு நிகண்டு, பாரதிதீபம்.

இவை இவ்வாருக அந்தக்காலத்தில் தமிழன் இளமை யிலேயே நிண்டு படித்தான். பத்தாம் ஆண்டுப் பராயத் திலேயே நிண்டு பாடமாக்கியவர்களும் இருந்தார்கள். இன்று ஒரே கருத்துள்ள இரண்டு சொற்கள் அறிந்தாற் போதும் என்கிருர்கள். இவர்கள் சொல்லிக்கொண்டிருக் கட்டும். நீங்கள் நிகண்டு படியுங்கள்.

## ஆண்மை

நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை

அஞ்சாத நிலையே ஆண்மை
அஞ்சினேர்க் கருளல் ஆண்மை
கெஞ்சாத வாழ்வே ஆண்மை
கெஞ்சினுர்க் கிரங்கல் ஆண்மை
மிஞ்சாத கோபம் ஆண்மை
மிஞ்சினுற் காத்தல் ஆண்மை
துஞ்சாத ஊக்கம் ஆண்மை
துன்பத்தில் துணையாம் ஆண்மை.

உள்ளதை உரைத்தல் ஆண்மை
ஒழிப்பதை ஒழித்தல் ஆண்மை
கள்ளத்தைக் கடிதல் ஆண்மை
கயமையைக் காய்தல் ஆண்மை
எள்ளொத்த துன்பம் கூட
எவருக்கும் இழைக்கா தாண்மை
வெள்ளத்தைப் போன்ற அன்பின்
வெற்றியே விரும்பும் ஆண்மை.

## தொழிலில் தெய்வத்தன்மை

நாம் செய்யும் தொழிலில் பொய்சொல்ல வேண்டியதில்லை. எவரையும் ஏமாற்ற வேண்டியதில்லை. தொழிலில் தர்மம் இருக்கிறது, புனிதம் இருக்கிறது, தெய்விகம் இருக்கிறது. இயற்கையில் அமைந்துள்ள தெய்வத்தன்மை எங்ஙனம் வாரி வழங்குகிறதோ, அதேபோல் தொழில்வளமும் வாரி வழங்குமாறு தெய்வத்தன்மை அமைந்துள்ளது. நாம் வாழ்வாங்கு வாழ்வதோடு வையத்தில் மற்றவரை யும் வாழவைப்பதே தொழிலின் தெய்வத்தன்மை. இந் தத் தர்ம உபதேசத்தை வைத்துக்கொண்டு தொழிலை ஆரம்பித்தால் தொட்டது துலங்கும். ஆர்வம், லட்சியம், திட்டம், செயல் எல்லாம் தொழிலுக்கு ஆதாரமாயுள் ளன. தொழிலை ஆசையோடு செய்தல்வேண்டும். ஆர் வத்தோடு செய்தல்வேண்டும். தமிழ்நாட்டில் எழுந் துள்ள ஆயிரக்கணக்கான அழகுமிக்க ஆலயங்கள் கோட்டங்கள் ஆர்வத்தினுலேதான் உருப்பெற்றுள்ளன. உயர்ந்துள்ளன. தொழிலாளர் வாழ்க, தொழில்வளம் பெருகுக.

★ குழந்தையைக் கண்டால் கோபம் குறையும் ★

## வானவாட்சி

முன்னொரு காலத்தில் மன்னர்கள், மன்னாதிமன்னர்கள், மன்னர் மன்னர்கள் நிலமெங்கும் தங்களாணை செலுத்தினர். பின்னர் கடலாட்சி என்னும் அதிகாரம் பெறுவதற்குப் பெரிய மிதக்கும் மாளிகைகளைச் செய்தனர். இன்று நிலம், நீர் என்பனவுக்கு மேலே வானத்தில் போக்குவரத்துச் செய்வதில் தம்மாட்சி செய்கிறார்கள். இன்று விமானப்பயணத்தில் ஏரோ புளொட் (Aero Flot) என்னும் தாபனம் ரஷ்யா நாட்டிலிருந்து 1300 விமானங்களைப் பறக்கவிடுகிறது. பரந்துபட்ட பாதையில் இவை பறப்பதற்கு நான்கு லட்சம் ஊழியர் கடமையாற்றுகிறார்கள். பத்துக்கோடி மக்கள் அறுபத்தேழு நாடுகளுக்குப் போய் வருகிறார்கள். அந்தப் பெரிய பருந்துகளோடு எங்கள் ஊர்க்குருவிகள் பறந்துகொள்ள மாட்டா.

## ஆள்பதிநாயகம்

எங்களை ஒன்பது ஆள்பதிகள் ஆள்கின்றார்கள். அவர்களை இறைவனே நியமித்தார். ஆள்பதிகள் எங்கள் வாழ்வு தாழ்வுகளை நிர்ணயிக்கிறார்கள். ஆள்பதிகளுக்கு நாயகமாக ஞாயிறு என்னும் சூரியன் இருக்கிறார். அவரைச் சுற்றி மற்றவர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கியிருக்கிறார்கள். எல்லோரும் ஒழுங்காக அவரைச்சுற்றி வருகிறார்கள். மேற்குநாட்டு விஞ்ஞானிகள் ஞாயிற்றின் குடும்பத்தைக் காணமுன்னரே எங்கள் முன்னோர்கண்டு சோதிடமும் எழுதியுள்ளார்கள்.

## என்னுடைய வாய் சும்மா இருக்காது

ஓர் அழகான பெண். எவ்வித குறையுமில்லை. ஆனால் எந்த நேரமும் 'காச்சான் பூச்சான்' என்று கலகலப்பாக ஏதாவது பேசிக்கொண்டிருப்பாள். எடி கொஞ்சநேரம் வாயைத் திறக்காமல் இருந்து பழகடி என்று உறவினர் உள்ளன்போடு சொல்லி வந்தனர். அவளுக்குப் பெரிய இடத்து மணமகன் கிடைத்தான். ஆத்தை மணவறையில் வாயைத் திறக்காமல் இரு என்று எல்லோரும் சொன்னார்கள். அவளும் இருந்து பார்த்தாள். அவளால் தாங்கமுடியவில்லை. வாயைத் திறந்தாள். "ஈச்சம் முள்ளால் இறுக்கிக் குத்தினாலும் என் வாய் சும்மா இருக்காது" என்றாள். எல்லோரும் அவளைப் பார்த்தனர். "ஐயர் தேங்காய்க்கு மஞ்சள் பூசவில்லை" என்று சுட்டிக் காட்டினாள். மணமகன் பக்கத்தார் "வாயாடிப் பெண்" என்று பட்டஞ் சூட்டினர்.

## மௌனத்தின் அருமை

ஒரு சமயம் முனிவர்கள் மூவர் முத்தியடையும் வழியில் மேலே சென்றார்கள். வழியில் ஒரு பருந்து பெரிய பாம்பைத் தூக்கியவாறு பறந்துபோனது. அதைக்கண்டதும் ஒருவர் பாம்பின்மீது இரங்கிப் பருந்து ஒரு பாபி எனக் கூறினர். அதற்குமேல் அவரால் போக முடியவில்லை. அவர் பூமியை நோக்கி இறங்கவேண்டியவரானார். மற்றைய முனிவர் இந்தப் பாம்புக்கு நல்ல தண்டனை என்றார். உடனே அவரும் கீழே இறங்கினார். மூன்றாமவர் எல்லாம் இறைவன் செயல் என்று கருதியவாறே மேலே சென்றார்.

## பூச்சி கொல்லிச் செடி

பதினைந்தாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் மாலுமியாயிருந்த கொலம்பஸ் கடலோடிக் கண்ட மேற்கிந்திய தீவுகளில் ஆறடி வளரக்கூடிய ஒரு செடியைக் கண்டார். அந்தச் செடியிலிருந்து இன்று கிருமிநாசினிகளில் ஒன்றாய நிக்கொட்டின் என்னும் நஞ்சைத் தயாரிக்கிறார்கள். இன்னொருசாரார் மனிதரை உருக்குலைத்துக் கொல்லும் வல்லமை வாய்ந்த சிகரெட், சுருட்டு தயாரிக்கிறார்கள்.

கொலம்பஸ் கண்ட நஞ்சுச்செடி சேர். வால்ரர் றலி முதலானவர்களால் ஐரோப்பிய நாடுகளிற் பரப்பப்பட்டு, ஒல்லாந்தரால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. யாழ்ப்பாணத்தாரின் தலைசிறந்த காசுப் பயிரான புகையிலை பணத்தை ஈட்டியதோடு உயிர்களைக் குடித்து வருகிறது. ஒரு சிகரெட்டில் உள்ள தூள் ஒரு கோழிக் குஞ்சை உடனடியாகக் கொல்ல வல்லது. அவுஸ்திரேலிய நிபுணரான பீற்றர்சன் இதனைப் பலர் மத்தியில் செய்து காட்டினார்.

## பொன் யாழ்

இசைக் கருவிகளுள் ஒன்றாய யாழ் நரம்புக்கருவி. யாழ் பலவகைப்படும். தமிழரைப்போல உரோமர், கிரேக்கரும் யாழ் கண்டனர். உரோமச் சக்கரவர்த்தி, உரோமாபுரி எரிந்தபோது யாழ்வாசித்தாராம். பின்னர் தற்கொலை செய்து இறந்தாராம். நீரோ போன்றவர்கள் இன்றும் இருக்கிறார்கள். நாரதர் யாழ் வாசித்தவர். சரஸ்வதியின் கையில் வீணை என்னும் நரம்புக் கருவி இருக்கிறது. கிரேக்க நாட்டைச் சேர்ந்த ஓபியஸ் யாழ் வாசிப்பதில் நிபுணர். அவரின் யாழோசை கேட்டு மகிழ்ந்த அப்பலோ என்னும் சங்கீத அதி தெய்வம் அவருக்கு ஒரு பொன் யாழ் கொடுத்தது. ஓபியஸ் யாழ் மீட்கும்போது மனிதரேயன்றி உயிரினங்களும் அவரைப் பின்தொடரும். அவருடைய அன்பு மனைவி யூறிடிஸ் என்பவளை ஒரு நாள் பாம்பு கடிக்கவே அவள் மயங்கி இறந்தாள். ஓபியஸ் கவலை காரணமாக யாழ் மீட்காமல் படுத்துக்கிடந்தார். உலகில் இசையே இல்லாது போனது. எல்லோரும் மனம் வருந்திய வேளையில் ஒரு நாள், ஓபியஸ் தன் மனைவியை மீட்டு வருவதற்குப் பாதாள உலகமாய நாகர் உலகத்துக்குப் போனார். அவருடைய யாழோசையில் விருப்பங்கொண்ட தேவர் தலைவன் யுபிட்டர் என்னும் வியாழபகவான் அவருக்கு அனுமதி வழங்கினார். நாகர் உலகில் ஓபியஸ் யாழ் வாசிக்கக் கேட்டு மகிழ்ந்த நாகராணி புரோசேபினா உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டாள். என் மனைவியை என்னிடம் தருதல் வேண்டும் என்று ஓபியஸ் இரந்தார். நாகராணி மகிழ்ந்து தன் அரசனான புளூட்டோ என்பாரிடம் கூறி வரம் கொடுத்தாள். புளூட்டோ ஓபியசிடம் ஒரு நிபந்தனை விதித்தார். அதாவது அவர் நாகருலகில் தன்னைப் பின்தொடரும் மனைவியைத் திரும்பிப் பார்க்கலாகாது என்பதாகும். அங்ஙனமே ஓபியஸ் முன்செல்ல மனைவி அவரைப் பின்தொடர்ந்து சென்றாள். பூவுலக எல்லை வந்தபோது ஓபியஸ் மகிழ்ச்சி தாங்க முடியாமல் மனைவியைத் திரும்பிப் பார்த்தான். அவள் அலறி அழுதவாறு மறைந்துபோனாள்.

★ சிசுவைப் பார்த்தால் தீமைகள் மறையும் ★

## நிலந்தரு செல்வம்

நிலம் சுரக்கும் நிதியம் கணக்கில்லாதவை. நிலத்திலிருந்து தோண்டி எடுக்கப் பெறுவன நிலந்தரு செல்வமாகும். நிலத்திலிருந்து சுத்தமான நீர் கிடைக்கிறது. உலோகவகைகளான பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, தகரம் என்பனவற்றை விட, எண்ணெய், நிலக்கரி, வைரம், காரீயம், ஈயம், மங்கனீஸ் என்பனவும் கிடைக்கின்றன. நிலத்திற் கிடைக்கும் மண் பாண்டங்கள் செய்யவும் வீடமைப்புக்குச் செங்கட்டி, ஓடு செய்யவும் உதவுகிறது. நிலத்திலே தான் நாம் வாழுகிறோம். நிலத்திலே தான் கமஞ்செய்கிறோம். நிலம் நம்முடைய வாழ்வுக்கு வளம் தருகிறது. நிலம் பூமாதேவி. தாய்த்தன்மை உள்ளது.

## மலைதரும் செல்வம்

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என்று பெயர் வைத்தவன் தமிழன். மலையிலிருந்து மண் உண்டாவதற்குமுன் தோன்றியவன் தமிழன். மலைதரும் செல்வங்களுள் நீர்வீழ்ச்சியும் ஒன்று, உலகில் பல நாடுகளிலும் அழகிய நீர் வீழ்ச்சிகள் உள்ளன. தமிழ்நாட்டில் குற்றாலம் அருமையான குளிர்ந்த நீர்வீழ்ச்சி. உலகில் பெரிய நீர்வீழ்ச்சி நயகரா. அமெரிக்கா - கனடா எல்லையில் விழும் இரு நீர்வீழ்ச்சிகளில் ஒன்று 187 அடி உயரத்திலிருந்து 2460 அடி அகலத்தில் விழுகிறது. மற்றது 193 அடி உயரத்திலிருந்து 984 அடி அகலத்தில் விழுகிறது.

## எறும்பினம்

உயிரினங்களுள் எறும்பு இனமும் ஒன்று. இதுவரை 2000 எறும்பினங்களைக் கண்டுள்ளார்கள். மிகப்பெரிய எறும்பினம் ஆபிரிக்காவில் மூன்றங்குல நீளம் வளருகிறது. எறும்பு சுறுசுறுப்பானது. நுள்ளான் முதல் கட்டெறும்பு வரை நன்றாக உழைப்பவை. சிற்றெறும்பு தனியான குண மகிமை வாய்ந்தவை. அவை மழை காலத்துக்கு வேண்டிய உணவை கோடைகாலத்தில் சேமித்து வைப்பவை. எறும்புகள் பழையகாலத்து முறையில் இராசா, இராணி, வேலையாள் பிரிவுகள் கொண்டவை. படை எறும்புகள் எதிரிகளை எதிர்த்துத் தம் மினத்தைக் காக்கும் சில எறும்புகள் ஒற்றுமையாகப் பெரிய உணவுப் பண்டத்தை நகர்த்திக்கொண்டுபோகும். எறும்பு தனித்துவாழ்வதில்லை. அது கூட்டுவாழ்வில் சுவை கண்டது.


## பெரிய அணைக்கட்டு

தமிழன் நீர் நிலைகளைப் பயன்படுத்த அணை கட்டினான். வெள்ளத்தையும் ஆற்றையும் வீண்போகவிடாமல் தடுத்துத் தேக்கிப் பயன்படுத்தினான். இன்று விஞ்ஞான உலகில் அமெரிக்காவில் உவாசிங்ரன் மாநிலத்தில் கொலம்பியா நதியைத் தடுத்துக்கட்டிய கௌலி அணை மிகப் பெரியது. அது 550 அடி உயரமும் 4173 அடி நீளமும் உள்ளது. கொங்கிறீட் அணைக்கட்டு வேலையில் இது ஒரு சாதனை.

## கடன் அடைத்த பேனா

எல்லோரும் பேனா பிடித்ததும் பேனா மன்னராகிறார்கள். பேனா பிடித்தவர் பலர் கடன்பட்டு அடைவு வைத்து ஈடுவைத்து, அவலப்பட்டுப் போவதுண்டு. ஆங்கிலவுலகில் ஜோர்ச் பேனார்ட்ஷோ எழுதிய ஒவ்வொரு சொல்லுக்கும் பெறுமதியிருந்தது. சேர் வால்ரர்ஸ்கொட் என்னும் பழைய புலவர் வாழ்வில் பட்ட கடனைத் தீர்ப்பதற்கு வழி இதுதான் என்று பேனாவைத் தூக்கினார். வேவளி நவீனங்கள் என்ற தலைப்பில் எழுதித் தள்ளினார். கடனும் தொலைந்தது. அவர் எழுதியவை உலகப் புகழ் பெற்றவை.

Warerly, Woodstock, Ivanhoe, Rob Roy, The Talisman, Kenilworth, Redgaurlet, Guy Mannering, Quentin Durward, Fortunes of Nigel, The Bride of Lemermoor, The Fair maid of Perth, Heart of Midlothian, Peveril of the Peak, The Abbot, The Monastery, The Antiquary, The Legend of Monrose.




## இளமையிலும் பொய் சொல்லாத உத்தமர்

ஏழாம் வகுப்பு மாணக்கன் அன்று தேகப்பயிற்சி வகுப்புக்குப் போகப் பிந்திவிட்டான். ஆசிரியர் பிந்தி வந்தது ஏன் எனக் கேட்க, அவன் அப்பாவுக்குச் சுகமில்லை அவருக்கு உதவியாக இருந்தேன். நேரம் போனது தெரியவில்லை. வீட்டில் மணிக்கூடு இல்லை என்றான். நீ பொய் சொல்லுகிறாய் என்று கூறிய ஆசிரியர் இரண்டு அணா குற்றம் விதித்தார். இளைஞன் தான் சொன்னதை ஆசிரியர் நம்பவில்லை என்பதை அறிந்து வெம்பி அழுதான். ஆசிரியர் உள்ளதை உள்ளபடி உணர்ந்து அவனைப் பாராட்டி மன்னித்து விட்டார். அந்த மாணக்கன் இறக்கும்வரை பொய் சொல்லாத காந்தியடிகளே தான்.

## பூசினிக்காயும் சுண்டங்காயும்

சீனா ஒரு பூசினிக்காய். மிகப் பெரிய நாடு. சான் மறினோ ஒரு சுண்டக்காய். மிகச்சிறிய நாடு. அது 23 சதுரமைல் பரப்புள்ள ஒரு குடியரசு. இதற்குப் பார்க்க இன்னும் கொஞ்சம் பெரிய நாடு சிங்கப்பூர். அது நெல்லிக்காய். தனிநாடு என்றால் நிலப்பரப்பு அடிப்படையில் அமைவதில்லை. மனங்கொண்டது மாளிகை. ஏழையின் குடில் அவனுக்குப் பெரிய அரண்மனை.

★ மகவின் எதிரே கல்மனம் மாறும் ★



## பிள்ளைப் பருவத்திலேயே நீண்ட பாடல்கள்

அவள் பெரிய வீட்டுப்பிள்ளை. இளமையிலேயே எல்லோருடனும் சேர்ந்து பழகி வந்தாள். படிப்பில் மகா கெட்டிக்காரியான அவளுக்கு ஆங்கிலம் நன்றாக வரவில்லை. ஒருநாள் தந்தையார் அவளைத் தண்டித்து அதிக கவனம் எடுக்கும்படி வற்புறுத்தினார். அவளும் சிரமப்பட்டு படித்தாள். ஒருநாள் அவள் வீட்டுக்கணக்குச் செய்து கொண்டிருந்தபோது ஆங்கிலப்பாட்டு மிடுக்கியது. அவள் பாடல்களை எழுதினாள். பாடல்கள் வேகமாக வந்தன. அவளும் எழுதித் தள்ளினாள். பதினொரு வயதுப் பெண், பெரிய ஆங்கிலப் புலவர்கள் வரிசையில் பாடத் தொடங்கி, பதின்மூன்றும் வயதில் 1300 வரிகள் கொண்ட கவிதையை எழுதினாள். அடுத்து 2000 வரிகளமைந்த ஒரு நாடகத்தையும் தயாரித்தாள். அவள் வானம்பாடி எனவும், இந்தியாவின் கவியரசி என்றும் பெயரெடுத்தாள். காந்திய வழியில் சேவை செய்து, பெரியவளாகி மாகாண ஆள்பதியாயும் பணிபுரிந்தாள். அவளின் மேடைப் பேச்சைக்கேட்டு ஆங்கிலேயர் வெயர்த்தனர். எங்கள் மொழியை இவ்வளவு திறமையாகப் பேசும் இந்தியப் பெண்ணுயிற்றே என்றனர். பல்லாயிரம் பாடல்களைப் பாடி ஏழை மக்கள் வாழ்வை உயர்த்திய நங்கை நல்லாள், மாதரசி வேறுயாருமில்லை. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு அவர்களே தான். ஓடக்காரன், வளையல் வியாபாரி முதலான தலையங்கங்களில் அருமையாகப் பாடியுள்ளார் அவர்.

## நிலவு

வட்ட நிலவே வாடாப் பூவே
சட்டி நிலாவே தாமரைப் பூவே
தொட்டிப்பாலே சோற்றுத் திரளே
எட்டி இருந்தாய் இனிய விருந்தாய்
வெள்ளித் தட்டே விண்ணுக்கரசே
பிள்ளை முகமே பேசுந் தமிழே
உள்ளக் களிப்பே உலக விளக்கே
அள்ளிப் புரிந்தாய் அழகு விருந்தாய்.

— பாரதிதாசன்

## பொன்விழா

உலகப் புகழ்பெற்ற ரஷ்யாவில் கொடுங்கோல் மன்னர்கள் இருந்தவர்கள். பயங்கரவாதி சைமன் இரத்த வெறிபிடித்த இராக்கதன். அவனுக்குப் பின்னரும் கொடியவர்கள் இருந்தார்கள். எழுபது ஆண்டுகளுக்கு முன் இருந்த சார்மன்னனைத் தொலைத்த லெனின் 1870இல் தோன்றி 1924இல் பொன்விழாக் கண்டு மறைந்தவர். அவர் 1917இல் ஆட்சியைக் கைப்பற்றி நல்லரசாங்கம் அமைத்தவர். அதுவே சோஷலிச அரசாங்கம் அது செயலில் அமைந்துள்ளது.

## சூழலை அறியும் மீன்

மீன் நீர் நிலைகளில் வாழ்ந்தாலும் அதற்கு வெப்பம் தட்பம், உவர்த்தன்மை, சுத்தநீர் எல்லாம் நன்கு தெரியும். கடலில் வாழும் சால் மீன் ஆற்றைத் தேடிச் சென்று முட்டையிடுகிறது. அத்துலாந்திக் கடலுக்குரிய சால் மீனினம் அயல்நாட்டு ஆறுகளைத் தேடிப் போகிறது. போகும் போது ஆறுகளின் பாய்ச்சலுக்கு எதிர் நீந்தியும் போகும். பெரிய நீர் வீழ்ச்சிகளையும் புறங்கண்டு போகும்.

## வரலாறுபடைக்கும் சமூகப்பணி

முற்காலத்தில் முடியுடை மன்னர்கள் திருக்கோயிற் பரிபாலனஞ் செய்தபோது, அறங்காவலராய், அறப்பணி புரிந்து, சமூக சேவையுஞ் செய்தார்கள். நாட்டில் நலிந்தவர், வசதியற்றவர் வாழ்வை மலர்த்தி ஊண், உடை, உறைவிடம், கல்வி, மருந்து உதவி வந்தார்கள்.

மனுநீதி தவறாமல் மாநிலம் காத்தவர்கள் போய் மறைந்த பின், மிலேச்சர் நாகரிகம் தலையெடுத்தாடியது. அதுவும் போயொழியத் தன்னுடும் தம்மரசும் கொண்ட பாரதமக்கள், திருக்கோயிற் பரிபாலனத்தைச் செவ்வனே செய்து காலந்தோறும் புனராவர்த்தன கும்பாபிடேகங்கள் செய்து, கோயிற் பொறுப்பில் சமூகசேவையும், கல்விப்பணியும் செய்து வருகிறார்கள்.

ஈழத்தில் தேவியாலயம் ஒன்று இருபது வருடப்புனரமைப்பில் தலைநிமிர்ந்து அருளொளி பாய்ச்சி அறத் தொண்டு செய்வதிலும் தனக்கு நிகரின்றி விளங்குகிறது.

ஐம்பது பெண் குழந்தைகளுக்குச் சகல வசதிகளும் செய்து வாழ்வளிக்கிறது. அயலில் பெரிய வைத்திய சாலைக்குப் பெருநிதியுதவியுள்ளது. மீனவர் குடும்பங்களுக்கு உதவி செய்துள்ளது. அகதிகளுக்குப் பெருமளவில் ஆவன செய்துள்ளது. ஊரில் கலை இலக்கியப்பணி செய்துள்ளது. யாழ்ப்பாணத்துப் பெரிய வைத்தியசாலைக்குப் பெருநிதியுதவியுள்ளது. உள்ளூர் சுகாதார அபிவிருத்திக்குப்பெருநிதி தந்துள்ளது. பழைய கிறிஸ்தவ கல்லூரியில் சைவக்கோயில் நிறுவியுள்ளது. உள்ளூர் மயானத்தை மிக நல்ல முறையில் பெருஞ்செலவு செய்து திருத்தியுள்ளது. உள்ளூரில் ஒரு இசைக்கலை வகுப்பும், அந்தணர்களுக்குச் சிவாசார்யவகுப்பும் நடத்தி வருகிறது. இவையெல்லாம் அற்புதமோ திருவருளோ யாதோ என்று அடியார்கள் அதிசயிக்கிறார்கள். இந்தத் திருக்கோயில், தெரியுந் தானே தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயில்.


★ மக்கட்பேற்றைவிடப் பெரிய பேறு கிடையாது ★



# இளமையில் கல்

யாரோ ஒருவர் இளமையில் கல் என்று பாரதியாரிடம் உரையாடிய வேளையில் சொன்னதும், அவர் புன்முறுவல் பூத்துக் கூடியது முதுமையில் மண் என்பது. அன்று பாரதியார் என்ன கருதினாரோ நாமறியோம். இன்று நாம் கருதுவது இது. கல் தோன்றி மண் தோன்றாக் காலம் என்று கூறும் தமிழன், இளமையில் வலிமையுள்ளவனாய் இருந்து, முதுமையில் இரக்கநெஞ்சும், ஈரமான செயலும் உள்ளவனாய் மலர்கிறான் என்பதாகும். வேடன் ஞானியானதும், வழிப்பறிகாரன் தர்மிஷ்டனானதும் நாம் அறிந்த வரலாறு.

இளமை மிடுக்கில் சேவை மனப்பான்மையில் பெரிய வைத்தியனாய் டக்டர் குப்புசாமியாயிருந்தவர் முதுமையில் கனிந்த சிவானந்தசுவாமியாயினர். கல்லிலும் பார்க்க மண் மிகுந்த பயனைத் தருகிறது. மண்ணின் பூர்வாச்சிரமம் கல்.



# முதுமையில் மண்

# அட்டைவண்டி

நாமறிந்த உயிரினங்களுள் அட்டைக்கு அநேக கால்கள் உண்டு. ஆனால் அது ஆறுதலாக ஊர்ந்து செல்லும். அழுக்கு நிலத்தில் அதற்கு அதிக விருப்பம். அட்டையைப் பார்த்துத்தான் செய்தார்களோ தெரியாது ஒரு பெரிய வாகனம். அது செப்பனிடப்படாத நிலத்திலும் விரைந்து செல்லும். அதற்குப் பல சில்லுகள் உண்டு. பெரிய சங்கிலித்தொடர்கள் அவற்றை இணைக்கின்றன. அதை மிக மிகத்தடிப்பான உலோகத் தகடுகளால் செய்கிறார்கள். பகைவரைத் தாக்குவதற்கு அது ஊர்ந்து வேகமாகப் போகிறது.

அந்தக்காலத்தில் தமிழர் ரத கஜ துரக பதாதி என்னும் நால்வகைப் படையினரை அறிந்தனர். தேர் மிகவேகமாகப் போகும். அதில் அரசனின் கொடி பறக்கும். அதைப் பாடியபின் தேரைப் பாடுவார்கள். கொடி பாடித் தேர் பாடி என்பது பழைய பாடல். தேர்களை மிக விரைவாகச்செய்து கொடுக்கக் கூடிய தச்சர்கள் அன்றிருந்தார்கள். ஒரு பகலில் எட்டுத் தேர் செய்தவனைப் புலவர் பாடியுள்ளார். வைகல் எண்டேர் வலித்த தச்சன். அந்தச் தச்சன் ஒருமாதகாலம் வினை செய்து ஒரு தேர் செய்வானானால், அந்தத் தேரைப் பற்றித் தெரியுந்தானே. பகைவர் படும்பாடு சொல்லவும் வேண்டுமோ? அடுத்து ஆனைப் படை, குதிரைப்படை, காலாட்படை. எங்கள் தமிழரசனின் ஆனைப்படை தங்கியிருந்த இடம் இன்று ஆனைப்பந்தி. ஆனைக்குக் கரும்பு விளைந்த இடம் கரும்பங்கொல்லை. அது இன்று வைமன்வீதி. யானைக்கு கம்பு விளைந்த இடம் கம்பந்தறை. அது இன்று நமது அம்மன்வீதி. அரசனுக்கு வீரங்கொடுத்தவள் வீரமாகாளி. அவள் இன்று பொறுத் திருக்கிறாள்.

அசிரியர் என்பார் அந்தக்காலத்தில் ஓநாய் போன்ற வயிறும் வலிமையும் வாய்ந்தவர்கள். அவர்களும் தேர்ப் படையை அறிந்தவர்கள். அவர்கள் 2800 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர்கள்.

இந்த நூற்றாண்டில் மோட்டார்வண்டி ஓடத் தொடங்கியது. அதைக் கண்டதும் எங்கள் பூட்டி, "றெயில்குட்டி ஓடுகிறது." என்றாராம். யோண்பௌலர் என்னும் கொம்பனிக்காரர் நீராவியால் இயங்கும் ஒரு யுத்தவண்டியைச் செய்தனர். அதை "ராங்" என வழங்கினர். முதலாம் உலகமகாயுத்தத்தில் பெல்சியம், பிரித்தானியா, பிரான்ஸ் முதலிய நாடுகள் ராங் செய்தன. இரண்டாம் யுத்தகாலத்தில் எல்லோரும் செய்யத் தொடங்கினர்.

# டேவிட் அடிகள்

வணக்கத்துக்குரியவராயும், பெருங்கல்விமானும், பன்மொழிப்புலவரும், ஏழைகள் சகாயனும், பிள்ளைகளை மனிதராக்கிய பெரியாரும், பொதுசனநூலகம் எரிந்தமை கேட்டு "ஆ" வென்று அமைதியாக உயிர் விட்ட தியாகியும் யார்? அவரே வணக்கத்துக்குரிய டேவிட் அடிகளாராவர்.

★ பண்புடைய மக்களால் குடும்பம் சிறக்கும் ★

## தொட்டிலிற் பழக்கம்

1. அதிகாலையில் நித்திரை விட்டு எழுந்திரு
2. இரண்டு நிமிடமாயினும் கடவுளை நினை
3. உணவின் முன் கைகால்களைச் சுத்தம் செய்
4. உணவுக்கு வணக்கஞ் செய்து உட்கொள்
5. உண்ணும்போது மௌனமாயிருக்கப் பழகு
6. இயன்றளவு கூட்டு வழிபாட்டில் கலந்துகொள்
7. படிக்கும் பாடசாலைக்கு மதிப்புக் கொடு
8. பாடசாலையும் வழிபடும் ஆலயமே தான்
9. பாடசாலைக்கு நேரந்தவறாமல் சென்று வா
10. பிழை செய்தல் மனிதவியல்பு, குற்றத்தை மறைத்தல் கோழைத்தனம்
11. நேர்மை அருமையான பண்பு. அது ஆர்ஜவம்
12. பல் சுத்தமாயிருப்பது போல் சொல் சுத்தம் வேண்டும்
13. ஒருவரின் பேச்சிலிருந்து உள்ளப்பண்பை அறியலாம்
14. உணர்ச்சியை வெளிக்காட்டுதல் ஆகாது
15. பொறுமையாய் இருத்தல் நல்ல அணிகலன்
16. சுறுசுறுப்பு, மனோவேகம் புத்தியோட்டம் வேண்டும்
17. சச்சரவில்லாத கூட்டுவேலையில் இன்பம் உண்டு
18. பொதுப்பணி செய்வதில் பூரண திருப்தியுண்டு
19. புயல் அடித்தாலும் அடிக்கடல் அமைதி தவறாது
20. பண்பில்லாத நூலறிவால் பயன் ஒன்றுமில்லை
21. வித்தியாகர்வத்திலும் பார்க்கப் படியாமலிருத்தல் நன்று
22. பெருங்காரியஞ் சாதிக்கவே நாங்கள் பிறந்தோம்
23. சாதனை புரிவதற்கு முதலில் வேண்டுவது மனவுறுதியே
24. மனவுறுதியிருந்தால் மலையையும் தவிடுபொடியாக் கலாம்

### உலக சுகாதாரத்தாபனமே!

ஆண்டுதோறும் ஒருநாளில் ஏதோ நினைவு கொண் டாடிவிடுவதுபோதுமா. நோய் வராமல் தடுக்கவும், வந்தால் நீக்கவும் உலகமெங்கும் பணிபுரிகின்ற நீங்கள் இலந்தைக் காட்டினர் தங்கள் மக்களுக்கு நோய்களை உண்டாக்கு வதை அறிந்தது உண்டோ?

## சீனி

நாங்கள் சீனி என்று வழங்கும் இனிப்புப் பண்டத்தை எங்கள் தமிழ் நாட்டார் சர்க்கரை என்பர். நாங்கள் சர்க்கரை என வழங்குவதை வெல்லம் என்பர். சீனி, சர்க்கரை, கற்கண்டு எல்லாம் கரும்பிலிருந்து பிழிந்த சாற்றைக் காய்ச்ச வந்த உற்பத்திப் பொருள்களாம். சாற்றைக் காய்ச்சச் சர்க்கரையாளுய், நீற்றையிடவே நீ வெளுப்பாளுய் என்பது பழைய பாடல். சீனி வெண்மை யாயிருப்பதற்குக் காரணம் கரியோடு தொடர்புள்ள நீறு இட்டு மாற்றுவதாகும். முற்காலத்தில் மாச்சீனி இருத்தல் எட்டுச் சதத்திற்குப் போதியளவு கிடைத் தது. அது பெரும்பாலும் மருந்துண்பதற்கும், திரு மணவீட்டில் பலகார வகைகள் செய்யவுமே பயன் தந்தது. கோப்பி, தேனீர் பருகும் பழக்கம் வழக் கமாகாத காலம் அது. இற்றைக்கு ஐம்பதாண்டுகளுக் குள்ளாகவே தேநீர் பருகும் பழக்கம் நம்மிடை புகுந்தது நாமுண்ணும் மாப்பண்டம் சோறு, பிட்டு, இடியப்பம், அப்பம் யாவும் உடம்பில் சமிபாடாகும் போது சீனிப் பொருளாகவே மாறுவதால், நம்மவர் முன்னர் சீனியை அதிகம் சேர்க்கவில்லை. சீனி சம்பந்தமான நோய் குறை வாகவே இருந்தது. சீனி கரும்பிலிருந்து பெறப்படுவது. நெல்லும் கரும்பும் தமிழன் கண்ட பல்லாண்டுப் பயிர் கள். கரும்பு பூக்கும் காய்ப்பதில்லை. நெல் காய்க்கும். இல்லத்தரசி பிள்ளைகளைப் பெறுவாள், பரத்தைப் பிள்ளை பெறுவதில்லை. பூத்த கரும்பிற் காய்த்த செந்நெற் கழனி என்று தமிழ்ப்புலவன் 2000 ஆண்டுகளுக்கு முன் அணி யிலக்கணந்ததும்ப பாடுஞனே பாட்டு. பத்தொன்பதாம் நூற்றுண்டின் ஆரம்பகாலத்தில் ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டி அசைத்து ஆண்ட வீராதி வீரஞன நொப்போலி யனை முறியடிப்பதற்குப் பல நாட்டினர் முட்டுக்கட்டை போட்டனர். கொன்ரினன்ரல் புளக்கெட் என்ற பெயரில் சீனி முதலிய பண்டங்களைக் கொடாது தவிர்த்தனர். கரும்பைவிட வேறு உள்நாட்டு மூலத்திலிருந்து சீனி செய்ய முடியாதா என நெப்போலியன் கேட்டபோது, அறிஞர்கள் “இதோ கரட்கிழங்கிருக்கிறது. சீனி தயாரிக் கலாம்” என்ருர்கள். பிலாக்கொட்டை பனங்கொட் டையை வெருட்டிப் பார்த்ததாம். பனம் பண்டம் பல் வகையாக உற்பத்தியாகட்டும். பனங்கட்டிதானே மிகவும் நல்லது. கல்லக்காரம் ஔடதம் போன்றது. பனையின் காலம் வந்துவிட்டது. பாளைகள் புறப்பட்டு விட்டன.

## யூனிசெவ் ஒரு வரப்பிரசாதம் அது எமக்கு வரும் வழியெல்லாம் முள்ளு

ஐக்கிய நாடுகளின் ஆதரவில் WHO, FAO போன்று UNICEF என்பது ஐக்கிய நாடுகளின் பிள்ளைகள் ஆண்டு நடவடிக்கைகளை ஒன்றிணைத்து துரிதப் படுத்துவதற்குத் தோன்றியது. அது பிள்ளைகளின் நலத் துக்காக எதையும் செய்ய தயாராயிருப்பது. சுகாதாரம் போஷாக்கு, கல்வி முதலியனவுக்காகப் பெருநிதி ஒதுக் கப்பெற்றுள்ளது. வசதி குறைந்த சேரிவாசிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம். இது வடக்கே வரும் வழியெல்லாம் முள்ளுச் செடிகள் தடையாயிருக்கின்றன. நல்ல குடிநீர் வழங்குவதற்கும் அப்பெருநிதி வசதி செய்யும்.

### வலது குறைந்த பிள்ளைகள்

இலங்கையில் வலது குறைந்த பிள்ளைகளை மனிதராக் கும் நிறுவனங்கள் இரண்டு அல்லது மூன்று இருக்கின்றன.

MILK WHITE PRODUCTS ARE SUCCESSFUL CHOICE EVERYWHERE

**தந்தையிலும் பார்க்க மைந்தர் அறிவிற் சிறத்தல் நன்று**



## பாவின் சுவைக் கடல்

திருவள்ளுவர் செய்த திருக்குறளை மறுவற நன்குணர்ந்தவர்கள் அதனை முப்பால் என்று கொண்டாடினார்கள். அதன் சுவையிலீடுபட்டவர்கள் இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தைத் தேனிலேயூறிய செந்தமிழின் சுவை என்றார்கள். அடுத்துவந்த கம்பரின் இராமாயணத்தைப் பாரிற் பொழிந்த தீம்பாற்கடல் என்றார்கள். கம்பன் தமக்கு முன்வந்த மூத்ததமிழ்ப் புலவர்களின் பாவில் சுவை கண்டவர். அவர் உண்டு பொழிந்ததே தீம் பாற்கடல் என்றார்கள். அந்தப் பாற்கடலை நாவின் இனிக்கப்பருகுவமே என்றும் அதன் நன்னயமுற்றும் தெளிகுவமே என்றும் பாடிப் பூரித்தார்கள். தமிழ் நாட்டில் காரைக்குடியார் கம்பனைக் குடிப்பதில் ஆராவின்பங் கண்டவர்கள். அவர்கள் கம்பனுக்கு விழாவெடுத்தமை, முத்திரை வெளியிட்டமை, கோட்டம் அமைத்தமை, இடைச்செருகல் நீக்கிக் கம்பன் பாடல்களைப் பதித்தமை, இரசித்துவருகை, கவியரங்கு, கருத்தரங்கு, நடத்தி ஆராய்ந்து சுவைத்தல், மற்றவரைச் சுவைக்கச் செய்தல், வானொலியில் உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் எல்லாம் ஆசைபற்றியேயாம். கம்பன் இராமகாதை தந்தமையும் ஆசைபற்றியேயாம்.

### கம்பனை மறந்தால்

கம்பனை மறந்தால் தமிழ் ஏது?
கவிதை என்பது கமழாது
அம்புவிக் கவிஞருள் அரசாகும்
அவனே தமிழ்மொழிப் பரிசாகும்.

கற்பனை சிறந்தது கம்பன் சொல்
கலைத்திறம் நிறைந்தது கம்பன் சொல்
அற்புத சித்திரம் அவன் பாட்டு
அறிவுக் கினிப்பது அவன் பாட்டு

சத்தியம் மிளிர்வது கம்பன் சொல்
சாந்தியைத் தருவது கம்பன் சொல்
நித்தியம் பெற்றது அவன் வாக்கு
நிந்தனை அற்றது அவன் வாக்கு.

— நாமக்கல் கவிஞர்

NO WASHING IS COMPLETE WITHOUT
MILK WHITE BLUE SOAP

## கம்பரை ஆதரித்தவர்கள்

கம்பருக்குச் சரஸ்வதி கடாட்சம் நிறைய இருந்தது. கம்பர் நாவில் சரஸ்வதி இருந்தாள். சரஸ்வதியே அவருடைய பாடல்களை உருட்டிவிட்டாள். கம்பரைச் சடையப்பவள்ளல், சோழமன்னன், பாண்டிய மன்னன், பிரதாபருத்திரன், ஏகம்பவாணன் முதலானோர் ஆதரித்தனர்.

## நன்றி மறக்காத கம்பர்

கம்பர் செய்ந்நன்றி மறவாச் சிந்தையுள்ள சீலர். சடையப்பவள்ளல் தமக்குச் செய்த உதவிகளை உள்ளத்தில் எழுதிவைத்துப் பின் இராமாயணம் பாடியபோது சடையப்பவள்ளலை உரிய இடங்களில் உவமேய உவமானமாக உருக்கமுடன் பாடியவர். கம்பர் சடையப்பவள்ளலைப் போற்றுமிடங்கள் பல. அவை இருத்த வேண்டிய இடங்களில் இருத்திய இலக்கிய நயங்கள். பாயிரம், வேள்வி, அகலிகை, மிதிலை, சேதுபந்தனம், நாகபாசம், மருத்துமலை, திருமுடி, விடை கொடுத்த வாழ்த்து முதலிய இடங்களில் அவர் சடையப்பவள்ளலை இருத்தியிருக்கிறார். நன்றியறிதல் இருந்தவாறு.

## கம்பன் புகழ் வாழ்க

தமிழ்நாட்டில் காரைக்குடியில் கம்பன் புகழ் வாழ்வாங்கு ஈழத்திலே நல்லூரிலேயும் அவர் புகழ் வாழும். இளைஞர்களின் ஆர்வம் கம்பருக்குக் கோட்டம் எழுப்பும் அளவில் பொங்கியுள்ளது. அண்மையில் அருமையான ஒரு சிறப்பு மலரையும் மலர்த்துவதற்கு இவர்கள் முயற்சி பெரிதாகியுள்ளது.

கம்பன் கவிப்பேரரசன் சக்கரவர்த்தி எனவே மதிக்கப்பெற்றவர். இவரைப் போலச் சக்கரவர்த்திகளானோர் சயங்கொண்டாரும் ஒட்டக்கூத்தருமாவர். சயங்கொண்டர் பாடிய கலிங்கத்துப் பரணியும், ஒட்டக்கூத்தர் பாடிய தக்கயாகப் பரணியும் பரணி இலக்கியக் கடலில் ஆழமானவை.

## தமிழில் பரணி இலக்கியங்கள் பலவுள

பாசவதைப் பரணி, அஞ்ஞானவதைப் பரணி, மோகவதைப் பரணி, இரணியவதைப் பரணி, கொப்பத்துப் பரணி, கூடல் சங்கமத்துப் பரணி குறிப்பிடத்தக்கவையாகும்.

## வேப்பம் விதைக்கு இப்போதே சொல்லிவைக்கிறோம்

நீங்கள் எவ்வளவு வேப்பம் விதைகள் தந்தாலும் நாங்கள் நல்ல விலை கொடுத்து வாங்குவோம். மண், கஞ்சல் இல்லாமல் நல்ல முத்துப்போல் துப்புரவாக்கித் தந்தால் மேலதிக விலை தருவோம். ஒரு மாதகாலத்தில் பழங்கள் கிடைக்கும் தானே. இப்பொழுதே சொல்லி வைக்கிறோம்.

— மில்க்வைற் தொழிலதிபர் —
தபால்பெட்டி 77, யாழ்ப்பாணம்.

★ அறிவுடைய மக்களால் நாடு சிறக்கும் ★

## சிறுவர் கல்வி

ஈன்று புறந்தரும் தாய் தன் பிள்ளையைச் சான்றோனாக்குதல் தந்தையின் கடன் என்றாள். தாயன்பு மிக்க ஔவையார் சிறுபிள்ளைகளின் கல்வியில் போதிய கவனம் எடுத்தார். ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை முதலிய நூல்களைத் தந்தார். உலகநாதன், சிவப்பிரகாசசுவாமிகள், குமரகுருபரசுவாமிகள், பிள்ளைகள் இளமையில் கற்று வயதேற உணரவேண்டிய நூல்களைத் தந்தார்கள்.

மேற்கு நாட்டவர் தொடர்பால் மொன்ரிசோரி, டால்ரன், பெஸ்ரலோஜி புரோபெல், டூயி, புறூணர், பியாஜே, ஓசபெல் முதலானோர் சிறுவர் கல்வி முறையில் ஈடுபாடு கொண்டு ஆய்வுரைகள் எழுதினார்கள். பிள்ளைகள் விளையாட்டு முறையில் கற்பதற்கு வழிகள் கண்டவர்களும் உளர். பிள்ளைகள் சுயமாக இட்டும் தொட்டும் கேட்டும் பாடியும் படிப்பதற்கு வழிகள் உள்ளன. மழலைப்பாடல்கள் பாடிய நிபுணர்களும் எம்முள் இருந்தார்கள். பிள்ளைகளின் படிப்புக்குச் சூழல் இனிமையும் அமைதியும் அமைய இருத்தல் விரும்பத்தக்கது. ஆடிப் பாடி அலுப்பின்றிப் படிப்பதற்கு ஆசிரியை உதவியாயிருத்தல் முறையாகும் என்று மேற்கு நாட்டு ஔவையாரான மொன்ரிசோரி கூறியுள்ளார்.

சிறுவரின் புலன்களுக்கு பயிற்சி கொடுக்கும் கல்வி சிறந்தது. கண், காது, வாய் முதலியன பயிற்சி இல்லாவிட்டால் சிறுவனை விலங்காக்கிவிடும். குழந்தைகளுக்கு சுயேட்சை கொடுப்பது பெருநன்மை பயப்பது. இன்பச் சூழலில் பாரதியார் சொன்ன வண்ணம் ஓடிவிளையாடி, மாடு, நாய், பூனை, கோழி, காகம் இவற்றுக்கெல்லாம் அன்பு காட்டி அவை நம்மில் அண்டிப்பிழைக்க வழிகாட்ட வேண்டும். கல்வி என்பது பிள்ளைகளின் மனப்பூட்டைத் திறக்கும் திறவுகோலாகும். ஆசிரியர், மாணாக்கர், பாடம் என்பன முக்கோணத் தொடர்பு கொண்டமைதல் முறையாகும். பிள்ளைகளுக்கு எதிர்கால ஆளுமை அளிப்பது.

---

## ஆண்களுக்கேயன்றிப் பெண்களுக்கும் இன்னும் அதிக பணிகள் உண்டு

முன்னர் ஐரோப்பிய நாடுகளில் சலிக்லோ என்னும் சட்டம் பெண்கள் ஆளும் உரிமை பெறுதலைத் தடுத்து நிலவியது. சில நாடுகள் பெண்களை வீட்டுக்குள்ளே பூட்டி வைத்திருந்தன. அந்தக் காலமெல்லாம் கழிந்து இன்று ஆண்களை மிஞ்சிப் பெண்கள் அலுவல்கள் பார்க்கிறார்கள். நாட்டின் ஆளுநராய், மந்திரிகளாய், நீதிபதிகளாய் கல்லூரி அதிபர்களாய், பொறியியலாளராய், வைத்திய நிபுணர்களாய், பேராசிரியைகளாய், படைத்தலைவர்களாய், தொழில் நிபுணர்களாய், சேவைத்துறவியராய் இன்னும் பலவிதமாகப் பணிபுரிகிறார்கள்.

இவ்வாறே ஆண்களைப் போலப் பெண்களும் இன்னும் முன்னேறி நாடு நாடாவதற்கு உழைக்க வேண்டும். இல்லறத்தில் பெண் சகதர்மினி. வீட்டுப் பொறுப்பில் மேலதிக கடமைகள் பெண்ணுக்கே உரியது. உதவி செய்ய முடியாத பெண்கள் பெரும்பணிகள் புரிகிறார்கள். சிரேஷ்டமான நல்ல கருத்துகளைக் கிரகிக்கத் தக்க பெண்ணின் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை பெரிய நிபுணனாக வருதலும் உண்டு. மாணாக்கியர் இளமையிலேயே நாடு சம்பந்தமான நல்ல கருத்துக்களை நினைவிற் பதித்திருந்தால் அவை காலப்போக்கில் நற்பயன் விளைவிக்கும். வெறும் பாடக்குறிப்புகளைச் சப்பிப் பரீட்சை மண்டபத்தில் துப்பிவிட்டுச் சிறப்புச் சித்தி பெறுதலில் வீரம் துலங்குவதில்லை. சுவாமி சிற்பவானந்தர் சொன்னார் வெள்ளைக்காரி ஒருத்தி தன் பிள்ளைகளுக்குத் தோடம் பழம் உரித்துக்கொடுத்த பின், தோலைக் கைலேஞ்சியில் பொத்தி வைத்திருந்து குப்பைத் தொட்டியில் போட்டாள் என்று. தோடம்பழம் தின்ற பிள்ளைகள் இந்தப் பாடத்தைப் பாரம்பரியமாகப் படிப்பித்து வந்திருப்பார்கள்.

---

## பிள்ளைகளை மனிதராக்கிய பெரியவர்

அரசாங்கங்கள் கல்வி மந்திரியார் என்றொருவரை நியமித்து வெள்ளை அறிக்கைகள் தயாரிப்பதில் அதிக காலம் செலவிடுகின்றன. ஆய்வுகள், அறிக்கைகள் பிள்ளைகளைப் பெரியவர்களாக்குவதற்கு அருகதையற்றுப் போவதுமுண்டு. கல்விக்கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதன் முன் ஓர் அரசாங்கம் பதவி பறிபோக வேறோர் அரசாங்கம் புகுந்து அடிதலை மாறச் செய்வதும் உண்டு.

பிள்ளைகளை மனிதராக்கும் போது, பண்பாடு படரச் செய்தலே பணியாகும். அரிச்சந்திரன், தருமர், இராமர், பரதன், இலக்குமணன், சீதை, தமயந்தி, சாவித்திரி முதலானோர் இலட்சியமாந்தராக அமைதல் முறையாகும். பெரியவர்களின் வரலாறுகளைப் பிள்ளைகள் அறிந்து ஒழுகுதலே படிப்பின் பயனாகிறது. ஒரு பூமாலையை அல்லது சங்கிலியைப் பார்த்து உணர்தல் ஒற்றுமைக்கு ஒரு அறிமுகம். ஒரு மணிக்கூட்டில் எத்தனை கருவிகள் சேர்ந்து ஒன்றாயியங்கி நேரம் காட்டுகின்றன. ஒரு கருவி மறுத்தால் மணிக்கூடு ஓடாமல் நிற்கிறது. பாடசாலை வகுப்புகள் ஒரு பெரிய சமூகம். ஒரு வகுப்பில் மாணாக்கர்கள் ஒரு சமூக அமைவு. விளையாட்டு வீரர்பதினொருவர் ஒருமுகமாக இயங்குகின்றனர்.

---

## Rules of Speech

Save Your lips from slips
Weigh every word when you speak.
Never speak ill of any one.
Do not exaggerate.
Be true and accurate in your speech.
Control your speech very Carefully.
Talk only a little.
Talk measured words.
Give up talkative nature.
Do not interfere with the affairs of others.

---

★ பாலகர் முன்னால் பகைமையும் பறக்கும் ★



## வேலைவாங்கிய அதிபர்

தானே நல்ல மாணுக்கியாயிருந்தவர். நல்லாசிரியையாயினுர். தன்னைப் போலப் பிற ஆசிரியையரும் படிப்பிக்க வேண்டுமெனக் கருதி அவர்களிடம் வேலை வாங்கினுர். கட்டுப்பாடு செட்டுத்தனமாயினும் கடவுள் நம்பிக்கையில் கண்ணியம் நிறைந்திருந்தது. இரண்டாயிரத்துக்கும் அதிகமான பெண்களைக் கட்டியவிழ்த்துச் சைவத்திறம் ஒளி வீசச் செய்தவர். பள்ளித்தலத்தில் முன்னரே இருந்த ஆலயத்தை அழகுபடுத்திக் கும்பாபிடேகஞ் செய்தவர். நால்வர் பொற்ருளை நம்பி வணங்கி அவர்களின் திருவுருவங்களைப் பெருமளவில் வரைவித்துப் பூசையில் வைத்தவர். பிள்ளைகளின் தாகந் தீர்க்கப் பெருமளவிலமைந்த நீர்த்தாங்கியை மில்க்வைற் தொழிலதிபரைக் கொண்டு அமைப்பித்தும் தம்பெயர் நிலவுமாறு பல பணிகள் செய்தவர். நாங்கள் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் பத்மா இராமநாதன் அவர்களால் உருவானவர்கள் என்று எதிர்காலத்தாய்மார் ஆயிரக்கணக்கானேர் நினைந்துருகுவர் அது போதும்.

## சிறுவர் அதிகமாகவுள்ள மாவட்டங்கள்

| | | |
|---|---|---|
| கொழும்பு | — | 10,40,200 |
| கண்டி | — | 501,150 |
| குருணுகல் | — | 445,056 |
| யாழ்ப்பாணம் | — | 304,380 |
| காலி | — | 302,808 |
| பதுளை | — | 282,625 |
| களுத்துறை | — | 263,880 |

## வசதியற்ற பிள்ளைகள்

இலங்கையில் வசதியற்ற பிள்ளைகளுக்கு ஆவன செய்யும் நிறுவனங்கள் ஐந்து இருக்கின்றன. ஆனுல் தனியார் பரிபாலனமாக 134 வரை உள்ளன. தனியார் பரிபாலனத்தில் இன்று மிகுசைவத்துறையில் துர்க்கை அம்மன் கோயிற் பரிபாலன கர்த்தாக்கள் நல்ல சேவை செய்கிறுர்கள். கிழக்கில் கல்லடி உப்போடை இராமகிருஷ்ண சங்கத்தார் வியக்கத்தக்க பணிபுரிகிறுர்கள்.

## மனித குலத்தின் விலைமதிக்க முடியாத செல்வங்கள்

சிறுவர் சிறுமியர் மனிதகுலத்தின் விலைமதிக்க முடியாத செல்வங்கள். அவர்கள் நாளைய உலகின் நம்பிக்கைகள். உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் 57 கோடியே 50 லட்சம் குழந்தைகளும், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் 106 கோடியே 96 லட்சம் குழந்தைகளும் இருக்கிறுர்கள். எங்கள் நாட்டில் 59 லட்சத்து 34 ஆயிரம் பிள்ளைகள் இருக்கிறுர்கள்.

எங்கள் நாட்டில் 1981ஆம் ஆண்டில் எடுத்த கணக்கில் 15 வயதுக்குட்பட்டவர்கள் இவர்கள். இன்று இவர்கள் பெருக்கம் இன்னும் அதிகமாகும்.

இன்னும்

| | | |
|---|---|---|
| 4வயதுக்குட்பட்டவர் | — | 15,44,000 |
| 5 — 9 வயதினர் | — | 17,81,000 |
| 10 — 14 வயதினர் | — | 17,09,000 |

## பிள்ளைகளின் பிறப்புரிமை

வெளிநாட்டுத் தாயார் இங்கிலாந்தில் தற்செயலாய்ப் பிள்ளைபெற்ருல் அந்தப்பிள்ளைக்கு 21வயதுவரை அங்கே பிரஜாவுரிமை உண்டு. இது நலம் தரும் அரசாங்கம்.

ஒவ்வொரு பிள்ளைக்கும் அது எங்கே பிறந்தாலும் அன்பு நேயம் கொண்டு ஆணையாள் அறிந்துவாழ உரிமை உண்டு. அதற்குப் போதியளவு போஷாக்கும் மருந்துதவிக்கும் உரிமை உண்டு. அது ஓடி ஆடி விளையாடி உடலப்பியாசம் செய்ய உரிமை உண்டு. அது படிப்பதற்கு இலவசக்கல்வி உரிமை உண்டு. பெயர் விளங்கவும் இனம் விளங்கவும் வளர உரிமை உண்டு. அது தற்செயலாய் வலது குறைந்து விட்டால் உடனடியாக உதவி உரிமை உண்டு. வெள்ளம் புயல் தீ முதலிய விபத்துக்களில் நிவாரணம் பெறுவதற்கு முதலிட உரிமை உண்டு. தன் தன் தனியாற்றலை விருத்தி செய்து தொழில் நடத்தி உழைப்பதற்கு உரிமை உண்டு. அன்பாகவும் அமைதியாகவும் வளர்ந்து உலகமெல்லாம் உறவு நாடாகக் கொள்ளப்பூரண உரிமை உண்டு. தமிழன் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கண்ட சர்வதேச சகோதரத்துவத்தை ஐக்கிய நாடுகள் 1945ஆம் ஆண்டளவில் உணர்ந்தன. பிள்ளைகளின் உரிமைக்கு ஆண்பால், பெண்பால், சிங்களம், தமிழ், நிறம், சமயம், மொழி, பிறப்புவழி முதலிய பேதங்கள் கிடையா, கிடையா, கிடையா. தரப்படுத்தல் தரைமட்டமாக்குதல் கிடையா.

★ பிள்ளையைக் கண்டால் பிரியமே பிறக்கும் ★




## (I)

வைமன் கதிரைவேற்பிள்ளை அவர்களின் தந்தையார் குமாரசுவாமி முதலியார் ஒரு வரகவி. அவரோடு உரையாடி மகிழும் அம்பலவாணர் அருளம்பலம் என்னும் உடுப்பிட்டி ஊரினர், ''ஐயா பழைய காலத்துப் புலவர்களின் அடிச்சுவட்டில் இன்று அந்தாதி, கோவை, சதகம் முதலிய பிரபந்தங்கள் பாடுவோர் இல்லாமற் போய் விட்டார்கள்.'' என்றார். குமாரசுவாமி முதலியார் ''அப்படிச் சொல்லாதீர்கள் இன்றும் இருக்கிறார்கள்'' என்று கூறித் தம்வழியே போனார்.

மறுநாள் குமாரசுவாமி முதலியார் அருளம்பலம் அவர்களைக் காணப்போனபோது கையில் ஒரு ஏட்டுக் கட்டையும் கொண்டு சென்றார். அருளம்பலம் அவர்களை ஆற அமர இருக்கச்செய்து தாம் கொண்டுசென்ற அருளம்பலக் கோவையை இராகத்தோடு பதம் பிரித்துப் பாடினார். பாடல்களைக் கேட்டதும் இறும்பூதெய்திய அருளம்பலவனார் துள்ளிக் குதித்து, ''நீங்கள் இரவோடிரவாக இதனைப் பாடி வந்தீர்களாக்கும்'' என்று கூறிக் கட்டித்தழுவி ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

தமிழில் நீதி, சிட்டாசாரம் கூறும் சதகநூல்கள் ஒருபுறமிருப்ப, இன்றைய நெருக்கடியான நிலையில் மலை தான் தலைமீது விழுந்தாலும் அச்சமில்லை என்று வாழும் கவி, க. வீ., கருகம்பனையூர் அருள்மிகு அன்னைமீது அன்பு கொண்டு அவள் அருள்கொண்டு செய்த அற்புதமான பிரபந்தம் நாகஇராச இராசேஸ்வரி சதகம். பதிகம் பாடவேண்டும் என்று கேட்டவருக்குச் சதகம் பாடிக் கொடுத்தமை பருத்தி புடைவையாய்க் காய்த்த மாதிரியாயிற்று.

இன்றைய இலக்கணக் கொட்டர் க.வீ. ஒரு பழைய பண்டிதர். பரமேஸ்வர பண்டித ஆசிரிய கலாசாலையில் உருவான இவர் தமிழ்நாட்டில் மெரினா கடற்கரையில் வசதியான மாடியில் தங்கியிருக்க நேர்ந்ததால் பாட்டு மிடுக்காமல் இருக்கமாட்டாது. பாடவந்து பாடிய இப் பாடல்களை ஆகா கூகூ என்று நாம் அலம்பாமல் உங்களையே படித்து மகிழும்படி கேட்கிறோம்.

இராஜி தேவஸ்தானத்தாரின் இரண்டாம் வெளியீடான இந்நூல் பக்திமயமானது. காப்பு, கருணைப் பொழிவு, மஞ்சளும் குங்குமமும், பாதாம்புய மேகம், ஞானப் பூஞ்சோலை, விலைவைக்கிறியே, குடமுழுக்காடும் குதூகலம், சுப வேதனையிலும் ஒரு சுபம், வெண்சங்கே முழங்கு, புதிர்போல் மறைந்தாள், கோயில் அனைத்தும் வலம் வரும் கோயில் முதலிய மகுடங்களோடு; பின்னிணைப்பாக தத்துவ மத்தியபீடம், சுகானந்த காவியம் தழுவிய பாடல்களும் வந்துள்ளன. விலை குறிக்கப் பெறவில்லை. தேவஸ்தானத்திற்குக் காணிக்கை கொடுத்து இந்த அழகிய ஆழமான அம்பிகை பாடலை வாங்கிப் படித்து ஆனந்தமடையலாம்.

## (II)

யாழ்ப்பாணத்துப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாயமைந்தது மருத்துவபீடம். மருத்துவ பீடமாய பெருநெறியிலே ஒரு நல்ல துறையாயமைந்தது குழந்தைகள் வைத்தியம். அந்தப் பெருந்துறையின் பெறற்கரும்பேறாக வந்துதித்தது ஆரம்பசுகாதார சேவையாளருக்கு ஒரு வழிகாட்டி.

முன்னர் பெருஞ் சித்தர்களான தேரையர் முதலானோர் நோயணுகா விதிகள் கூறினார்கள். இன்றைய பேராசிரியர் இராமதாஸ் பரந்த வைத்தியத் துறைகள் அழாவி முப்பது தலையங்கங்களில் சுகாதார வாழ்வை நடத்திச் செல்கிறார்.

இவர் கூறுவனவற்றை ஆற அமர இருந்து கருத்தூன்றிப் படிப்பவர்களுக்கு அண்மையில் இயமன் வரமாட்டான். அவனுக்கு எங்களிடம் வேலை இல்லை என்று கூறி அவர்கள் இறுமாந்திருக்கலாம்.

உலக சுகாதார நிறுவனத்தார் இந்த நூலை ஏற்றுப் பல மொழிகளிலும் பெயர்த்து வெளியிட்டால் அவர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்தவராவர். பேராசிரியர் பலவித நோய்களின் தன்மைகளையும் அவற்றின் தாக்கங்களையும் கூறுவதோடு அங்காதிபாதத்தை அமைவாகக் கூறி, ஆங்கில மொழிப் பதங்களையும் அநுசரணையாகத் தந்துள்ளார்.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)

## பாவேந்தர் பாரதிதாசன் பாராட்டிய ஓவியக்காரர்



''கண்ட காட்சியைச் சில வினாடிகளில் ஓவியமாக வரைந்து காட்டும் திறம் நண்பர் பெனடிக்ட் அவர்களிடம் மிகச்சிறந்து விளங்கக்கண்டு நான் பெரிதும் வியப்புற்றேன். அவரது கைவண்ணம் கண்டு வியப்புறாதார் யாரும் இருக்கமாட்டார். அவர் ஈழம் தந்துள்ள இணையற்ற செல்வமாகத் திகழ்கின்றார். வாழ்க அவர் தம் கலைவளம். வளர்க அவர்தம் முயற்சி. வெல்க அவர்தம் தொண்டு.''

★ சான்றோனாய மகனால் தாய்க்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ★

## முப்பது ஆண்டுகளுக்கு முன்

உலகில் ஒரு வல்லரசும் நல்லரசுமாய் உள்ள ரஷ்யா அன்று 4-10-1937 இல் விஞ்ஞான உலகில் ஒரு விந்தை புரிந்தது. நாம் வாழும் பூமி ஒரு கோள். இதைப் போலப் பல கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன. கோள் என்றாலும் கிரகம் என்றாலும் ஒன்றே. கிரகங்களைச் சுற்றி வரும் சிறு கிரகங்களை உப கிரகங்கள் என்பர். சந்திரன் ஒரு உபகிரகம். இவை யாவும் இயற்கையானவை.

ரஷ்யா விஞ்ஞான முதிர்ச்சியில் ஒரு செயற்கைக் கோள் செய்து மேலே அனுப்பியது. அடே அப்பா என்று எல்லோரும் மூக்கின்மேல் விரலை வைத்தார்கள். அதற்கு முதலாம் ஸ்பூட்னிக் என்று பெயர். அவர்கள் அறிவுலகத்துக்கும் ஸ்பூட்னிக் என்னும் பெயரில் திங்கள் தோறும் ஒரு அறிவுத் திரட்டை வெளியிடுகிறார்கள். அங்காந்த வாயோடு எல்லோரும் அதனை வாசிக்கிறார்கள். அதில் ஊத்தைக் கதைகள், பேய்க்கதைகள் வெளிவருவதில்லை. அன்று விண்வெளியை நாடிப் பிரமதேவன் அன்னப் பறவையாகிப் பறந்தாற்போல மேலே போன முதலாம் ஸ்பூட்னிக் 23 அடி நீளமும் 184 இறுத்தல் நிறையும் கொண்டது. சாதாரணமாக நாம் நடக்கும் வேகம், கார் ஊரும் வேகம், விமானம் பறக்கும் வேகம் என்ன என்பன எமக்குத் தெரியும். முதலாம் ஸ்பூட்னிக் ஒரு மணி நேரத்தில் 70,000 மைல் பறந்து 90 நிமிடத்தில் உலகத்தைச் சுற்றி வந்தது.

பின்னர் அமெரிக்க விஞ்ஞானிகள் துள்ளி எழுந்து விட்டோமா நாம் என்று கூறிச் செயற்கைக்கோளை விட்டனர். அதற்கு எக்ஸ்புளோறர் என்பது பெயர். அது 31 அடி நீளமானது அது 1-1-1958 இல் உலகத்தைச் சுற்றத் தொடங்கியது.

ஸ்பூட்னிக் செய்த ரஷ்ய விஞ்ஞானிகள் சேகிபவ்லோவிக், கொறோலொவ் ஆவார்கள். எக்ஸ்புளோறர் செய்த அமெரிக்க விஞ்ஞானிகள் வொன்புறோன், பிக்காறிங் ஆவார்கள்.

---

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

### புத்தக விமர்சனம் - II

இதை ஒவ்வொரு இல்லத்தரசியும் வாங்கித் தினமும் படித்துத் தன் குழந்தைகளைப் பேணி வளர்க்கலாம். மருத்துவ மாணாக்கர்கள் பாக்கியசாலிகள். அவர்கள் இதனை எழுத்தெண்ணிப் படித்துத் திறமைச் சித்திபெறலாம் என்பது திண்ணம். கத்தோலிக்க அச்சகத்தாருக்குப் பொன்னாலபிடேகஞ் செய்தாலும் தகும். அவர்கள் அழகாக எழுத்துப் பிழையின்றி இதனை உருட்டிவிட்டிருக்கிறார்கள். புகழ்பெற்ற பீடாதிபதி அவர்களின் சிறப்புரை பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டாற் போல இருக்கிறது. இதனைப் பதித்து வெளியிட்டவர்கள் ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப்பிரிவு, போதனாவைத்தியசாலையினராவர். இதன் விலை குறிக்கப்பெறவில்லை.


ஆதரவாளர்கள்
அறிந்தவைதானே!




எங்கள் தயாரிப்புகள் எங்கள் கையிலிருந்து
உங்கள் கைக்கு வருவதற்கிடையில்
எத்தனை இடையூறுகள்.

- போக்குவரத்துத் துன்பம்
- எரிபொருள் தட்டுப்பாடு
- மூலப்பொருள் விலையுயர்வு
- போக்குவரத்துத் துன்பம்

இத்தனை வேதனைகளுக்கிடையிலும்
நாங்கள்
உங்கள் தேவைகளைக் கவனிக்கிறோம்.

உங்கள் ஆதரவு எங்களுக்குத் தேவை.

★ மில்க்வைற் தொழிலகம் ★


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. இ. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1 - 6 - 87